முருகப்பெருமான் துணை

ஆசான் அரங்கமகா ஞானியர்க்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1383

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.07.2023, வியாழக்கிழமை

1. சீர்திருத்தம் உலகில் செய்து
சித்திமிகு மக்களை படைக்க
பாரெங்கும் சன்மார்க்க விதை
பழுதின்றி விதைத்து அருளுகின்ற
2. அருளுகின்ற அரங்கனே ஐயனே
அகிலமதில் உன் பெருமை பாடி
அச்சமற சுப்ரமணியர் யானும்
அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
3. ஆசிதனை சோபகிருது மிதுனத்திங்கள் உரைப்பேன்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 28ம் நாள், 13.07.2023, வியாழக்கிழமை)
அப்பனே உன் மார்க்கம் உலகமெல்லாம்
ஆற்றல்பட விரைந்து பரவ ஒப்பில்லா ஞானவான்கள் படை
உலகமெங்கும் நிரம்பி அஞ்ஞானவான்கள் அஞ்ச
4. அஞ்சவே மாற்றம் சடுதி காணும்
அறம் தர்மம் அளவிலா பெருகி
மிஞ்சவே உலகமெல்லாம் மேலான சக்தி
முருகப்பெருமான் என் சக்தியாக மாறி
5. மாறியே உலகத்தில் அற்புதம் மாதவசி உன்னால் நடந்தேறும்
ஆறுதலாய் உன் தொண்டர்படை அகிலத்தில்
அறம்தனை எடுத்துச் செல்ல
மாறுதல் சடுதி காணக்கூடும்
6. மக்களுக்கு இன்னலில்லாத ஞானவாழ்வாக
பாதுகாப்பு கொண்ட தர்ம வாழ்வாக
பழுதில்லா ஞானவான்கள் தலைமை பெருமைபட அமையும் வண்ணம்
பெரும் மாற்றம் உலகம் கண்டு அற்புதம் நடக்கும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–